பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

22 12 2024 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. தேசிய திறன் மேம்பாட்டுக் குழுமத்தின் கீழ் பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு ஜி.எஸ்.டி. வரியில் இருந்து விலக்கு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

2. மண்டல மொழிகளில் பல்வேறு பாடத்திட்டங்களை உருவாக்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் வளர்ச்சியிலும், பேரிடர் காலங்களிலும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் பாதுகாப்புப் படையினர் முக்கிய பங்கு வகிப்பதாக தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

4. ‘ஃபிட் இந்தியா சைக்கிள்’ பேரணியை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

5. ஆசிய கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

<<<<>>>>

உலக அளவில் நிதிசார் தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னோடி நாடாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக குவைத் சென்றுள்ள அவர், அங்குள்ள இந்திய வம்சாவளியினரிடம் கலந்துரையாடினார்.

குவைத் நாட்டின் வளர்ச்சிக்கு வெளிநாடு வாழ் இந்தியர்கள் பெரும் பங்காற்றியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

திறன், தொழில்நுட்பம், புதுமைக் கண்டுபிடிப்புகள், மனித சக்தி போன்றவற்றில் இந்தியா வலிமையான நாடாக உள்ளது என்றும், அவை புதிய குவைத் நாட்டை கட்டமைப்பதற்கு உதவிடும் என்றும் பிரதமர் கூறினார்.

பெண்கள் தலைமையிலான வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களில் இந்தியா முன்னேற்றம் அடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

வளைகுடா நாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உதவிடும் வகையில் இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற உள்ள மகாகும்பமேளா மற்றும் வெளிநாடு வாழ் இந்தியர் தின நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருமாறு அங்குள்ள இந்திய வம்சாவளியினருக்கு பிரதமர் அழைப்பு விடுத்தார்.

அரேபிய வளைகுடா கோப்பை கால்பந்து போட்டி தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினராக பிரதமர் பங்கேற்றார்.

குவைத்தில் உள்ள பயான் அரண்மனையில் இன்று அவருக்கு பாரம்பரிய அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

பின்னர் அவர், அந்நாட்டு அமீர் மற்றும் பட்டத்து இளவரசரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்துகிறார்.

இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தமது இந்தப் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தாயகம் திரும்புகிறார்.

<<<<>>>>

ரயில்வே துறையில் பாதுகாப்பு, பராமரிப்பு, தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதில் உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பான சேவையாற்றிய ரயில்வே ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு விருதுகளை வழங்கிப் பேசினார்.

பாம்பனில் புதிதாக கட்டப்பட்டுள்ள ரயில் மேம்பாலம் விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் 5 ஆயிரத்து 300 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சரக்குப் போக்குவரத்திற்கான வழித்தடங்கள் அமைப்பதற்கான பணிகள் விரைவில் நிறைவடையும் என்றும், மின்மயமாக்கல் பணிகள் அடுத்த ஆண்டு நிறைவடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

கஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலான ரயில்வே திட்டங்கள் நிறைவடையும் தருவாயில் உள்ளதாகவும், இதன்மூலம் நாடு முழுவதும் தடையற்ற ரயில் போக்குவரத்து உறுதி செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

மண்டல மொழிகளில் பல்வேறு பாடத்திட்டங்களை உருவாக்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்துறை முக்கிய பங்களிப்பை கொண்டுள்ளதாக கூறினார்.

கிராமப்புற மேம்பாடு மற்றும் விவசாயிகளின் நலனுக்காக பணிபுரிபவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் என்று வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசினார்.

புயலால் பாதிக்கப்பட்ட போச்சம்பள்ளி, ஊத்தங்கரை கிராம மக்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 5 ஆயிரம் நபர்களுக்கு 2 கோடியே 55 லட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 66 கோடியே 65 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சியிலும், பேரிடர் காலங்களிலும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் பாதுகாப்புப் படையினர் முக்கிய பங்கு வகிப்பதாக தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

வேலூரில் நடைபெற்ற பாதுகாப்புப் படையில் பணிபுர்ந்து ஓய்வு பெற்றவர்களுக்கான குறைதீர்க்கும் முகாமில் ஒரு கோடி ரூபாய்க்கான நிலுவைத் தொகையை அவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், சுதந்திரப் போராட்டத்தில் வேலூர் மாவட்டத்தின் பங்களிப்பு குறித்து அவர் நினைவுகூர்ந்தார்.

இந்த குறைதீர்க்கும் முகாமில் 2 ஆயிரத்து 100க்கும் கூடுதலான ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பங்கேற்றனர்.

<<<<>>>>

உடல்நலத்தைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ‘ஃபிட் இந்தியா சைக்கிள்’ பேரணியை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

ஞாயிற்றுக்கிழமைதோறும் சைக்கிள் பயிற்சி மேற்கொள்வதை வலியுறுத்தும் வகையில் இந்தப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேசத்தில் அடுத்த 3 நாட்களுக்கு கடும் குளிர் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு-கஷ்மீர், லடாக், கில்ஜித் பல்கிஸ்தான், முஸாஃபராபாத் ஆகிய பகுதிகளில் ஓரிரு இடங்களில் நாளை வரை குளிர் நிலவும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

உத்தராகண்ட், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி, உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் குறைந்தபட்ச வெப்பநிலை 4 முதல் 8 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

தில்லியின் காற்று மாசின் தரம் மேலும் மோசமடைந்துள்ளதாக மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

நேற்று தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் காற்றின் தரக் குறியீடு 402ஆக பதிவாகி உள்ளதாக மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதனிடையே தில்லியில் இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் கடும் பனிப்பொழிவு இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தேசிய திறன் மேம்பாட்டுக் குழுமத்தின் கீழ் பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு ஜி.எஸ்.டி. வரியில் இருந்து விலக்கு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் நேற்று நடைபெற்ற 55வது ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், இதற்கான அறிவிக்கை முறைப்படி வெளியிடப்பட்ட பின்னரே நடைமுறைக்கு வரும் என்று கூறியுள்ளார்.

வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் விதிக்கும் காலதாமத கட்டணம் மற்றும் அபராதா தொகைகளுக்கு ஜி.எஸ்.டி. வரி விதிக்கப்படமாட்டாது என்று அவர் தெளிவுபடுத்தினார்.

சிறு நிறுவனங்களை பதிவு செய்வதில் உள்ள சிரமங்களைக் களைவதற்கான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மின்னணு வர்த்தகம் மூலம் மேற்கொள்ளப்படும் உணவுப் பொருள் வினியோக கட்டணத்திற்கான ஜி.எஸ்.டி. வரியை குறைப்பது குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும் என்று திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவ செலுவுகளைக் குறைக்க மரபணு சிகிச்சை மீதான ஜி.எஸ்.டி. வரியை 12 சதவீதத்தில் இருந்து பூஜ்ஜியமாக குறைக்க வேண்டும் என்று மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு வலியுறுத்தியுள்ளார்.

ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் தமிழகம் சார்பில் கலந்துகொண்ட அமைச்சர், பதிவு செய்யாத நபர்களுக்கு மேலாண்மை தொடர்பான தகவல் தரவு அறிக்கைகளை உருவாக்கி அனைத்து மாநிலங்களுக்கும் பகிர்ந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் புதிதாக பொறுப்பேற்றுள்ள அமைச்சர்களுக்கான இலாக்காக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மும்பையில் அம்மாநில ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் முதலமைச்சர் தேவேந்திர ஃபட்னவிஸ் உள்ளாட்சி, எரிசக்தி, சட்டம் மற்றும் நிதி, பொது நிர்வாகம் ஆகிய துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.

துணை முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே, நகர்ப்புற மேம்பாடு, வீட்டுவசிதி, பொதுப்பணித்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மற்றொரு துணை முதலமைச்சர் திரு. அஜித் பவாருக்கு நிதித்துறை, திட்டம், மாநில கலால்துறை ஆகியவை ஒதுக்கப்பட்டுள்ளன.

அம்மாநில பிஜேபி தலைவர் திரு. சந்திரசேகர் பவன்குலேவிற்கு வருவாய் துறையும், திரு. ராதாகிஷ்ணா பாட்டீலுக்கு நீர்வளத்துறையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

பிரேசிலில் உள்ள மினாஸ் ஜெராயிஸ் மாநிலத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 38 பேர் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்தனர்.

45 பயணிகளுடன் **Sao Paulo**-வில் இருந்து புறப்பட்ட பேருந்தின் மீது கார் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக அருகில் இருந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு அந்நாட்டு அதிபர் திரு. லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

விலங்குகள் பரிமாற்ற திட்டத்தின்கீழ் குஜராத் மாநிலம் ஜுனாகத் சக்கர்பாக் விலங்கியல் பூங்காவில் இருந்து 2 சிங்கங்கள், மத்தியப்பிரதேச மாநிலம் போபாலில் உள்ள தேசிய வனவிலங்கு பூங்காவிற்கு கொண்டு செல்லப்பட்டது.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட சிங்கங்களள் 21 நாட்களுக்கு தனிமையில் வைத்து பராமரிக்கப்படும் என்றும், பின்னர் சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்கு அனுமதிக்கப்படும் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா - பங்களாதேஷ் அணிக்ள தற்போது விளையாடி வருகிறது.

<<<<>>>>

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

வதோதராவில் நடைபெறும் இப்போட்டி பிற்பகல் ஒன்றரை மணிக்கு தொடங்குகிறது.

**<<<<>>>>**

வெஸ்டன் இந்தியா சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Anahat Singh** இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

மும்பையில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் அவர், எகிப்தின் **Nor Khafagy**-ஐ 11-4, 12-14, 11-9, 11-9 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

**<<<<>>>>**

தோஹாவில் நடைபெற்று வரும் ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளது.

ஆடவர் 67 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் சங்கர் லாபுங் வெண்கலப் பதக்கம் வென்றார்.

**<<<<>>>>**

ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தில்லி அணி - ஜெய்ப்பூர் அணியை வென்றது.

குஜராத் - பட்னா அணிகளுக்கு இடையேயான மற்றொரு போட்டி டிராவில் முடிவடைந்தது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் பெங்களூரு – தமிழக அணியையும், மும்பை அணி – ஹரியானாவையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The End>>>>**